நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.5, திருநெல்வேலி.

**முன்னிலை: திரு. V. ஆறுமுகம் பி.எல்.,**

நீதித்துறை நடுவர் எண்.5, திருநெல்வேலி. (மு.கூ.பொ.)

2023–வது வருடம், பிப்ரவரி திங்கள் 13–ம் நாள், திங்கள்கிழமை

**ஆண்டிப்பட்டிகை விசாரணை வழக்கு எண். 445/2020**

(CNR No. TNTL - 04 – 005926 - 2020)

அரசுக்காக
உதவி ஆய்வாளர்,
முன்னீர்பள்ளம் காவல் நிலையம்,
திருநெல்வேலி.
குற்ற எண். 311/2018 ... குற்றமுறையீட்டாளர்

– எதிராக –

ராமசாமி (வயது 29/2018)
த/பெ ஆறுமுகம்
48, பெருமாள் சன்னதி தெரு,
கோபாலசமுத்திரம். ..... எதிரி

இவ்வழக்கு 26.06.2020–ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வந்து 13.02.2023–ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்த போது, அரசு தரப்பில் குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2, திருநெல்வேலி அவர்கள் முன்னிலையாகியும், குற்றஞ்சாட்டப்பட்ட நபரின் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. கோதண்ட ராமன் பி.ஏ., பிஎல்., அவர்கள் முன்னிலையாகியும், இது நாள் வரை நிலுவையிலிருந்து வந்த வழக்கின் ஆவணங்களையும், சாட்சியங்களையும், பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதங்களை கேட்டும், இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

1) இவ்வழக்கில் அசா1 சண்முகவேல் என்பவரும், எதிரி ராமசாமியும் கோபாலசமுத்திரம் பெருமாள்கோவில் சன்னதி தெருவை சேர்ந்தவர்கள். எதிரி ராமசாமி என்பவர் கடந்த 1 1/2 வருடங்களுக்கு முன்பு அசா1–ன் இளையமகள் உமாமகேஸ்வரி என்ற உமாவிடம் கேலி கிண்டல் செய்ததால் ஊர் பெரியவர்கள்

மூலம் பேசித் தீர்த்துக் கொண்டுள்ளனர். இது சம்மந்தமாக அசா1 சண்முகவேல்க்கும் எதிரி ராமசாமிக்கும் முன் விரோதம் இருந்துள்ள காரணமாக, கடந்த 04.08.2018–ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில், அசா1 சண்முகவேல் என்பவர் அவரது வீட்டு முன்பு நிற்கும் போது, அங்கு வந்த எதிரி ராமசாமி என்பவர் அசா1–யை பார்த்து தேவடியா மவன, செறுக்கி உள்ள உன் மவள நான் இன்னமும் கிண்டல் பண்னுவேன் உன்னால என்ன பண்ண முடியும் என்று அசிங்கமாக பேசியுள்ளார், அதற்கு உடனே அசா1 எதிரியிடம் ஏன் பிரச்சனை செய்கிறாய் என்று கேட்டதற்கு அவரை வயதானவர் என்று கூட பாராமல் கீழே தள்ளியும் என்னைக்கினாலும் உன் சாவு என் கையால தான் என்று கொலை மிரட்டல் விடுத்தது தொடர்பாக அ.சா.1 கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப குற்ற எண். 311/2018 இதச பிரிவுகள் 294(பி), 352, 506(2)–ன் படி எதிரியின் மீது குற்றப்பத்திரிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார் என்பதாகும். பின்னிட்டு இவ்வழக்கானது இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு அழைப்பாணை சார்வாக உத்தரவிடப்பட்டது.

2). எதிரி அழைப்பாணை பெற்று இந்த நீதிமன்றத்தில் ஆஜரான போது எதிரிக்கு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு எதிரிக்கு போதிய கால அவகாசம் வழங்கிய பின்னர் எதிரியின் மீது இதச பிரிவுகள் 294(பி), 352, 506(2)–ன் படி குற்றச்சாட்டுகளை வனைந்து விளக்கி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்துக் கூறினார். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு வழிவகை செய்யப்பட்டது.

3). அரசு தரப்பில் ப.சா.1 முதல் ப,சா, 7 வரையிலான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4). அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் சான்றாவணங்களில் இருந்தும் குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு பாதகமாக அமைந்த சங்கதிகளை கொண்டு குற்றஞ்சாட்டப்பட்ட நபரிடம் கு.வி.மு

.ச பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் வினவிய போது, குற்றஞ்சாட்டப்பட்ட நபர் அத்தகைய சாட்சிய சூழ்நிலைகளை பொய் என மறுத்தார். குற்றஞ்சாட்டப்பட்ட நபரின் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணம் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

5). அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும், தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களிலிருந்தும், இரு தரப்பு வாதங்களிலிருந்தும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் இருந்தும் தற்போது தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில் அரசு தரப்பில் குற்றம் சாட்டப்பட்ட நபரின் மீதான குற்றச்சாட்டு தகுநிலை சந்தேகத்திற்கு இடமின்றி மெய்பிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

6). அ.சா.1 திரு. கோபால் என்பவர் சாட்சியானவர், வழக்கு சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட சாட்சியாகவும் மற்றும் வழக்கு சம்பவம் குறித்து முன்னீர்பள்ளம் காவல்நிலையத்தில் புகார் அளித்த குற்றமுறையீட்டாளராகவும் இறுதியறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளார்கள். அசா1 கோபால் இந்நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்தில், சாட்சி கணேசனை தெரியும். இவ்வழக்கின் புகார்தாரர் தனது சித்தப்பா. தற்போது என் சித்தப்பா திருவனந்தபுரத்தில் வசித்து வருகிறார். ஆஜர் எதிரியை தனக்கு தெரியும், சம்பவத்தை தான் நேரடியாக பார்க்கவில்லை என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். மேற்கண்ட அ.சா.1 கோபாலின் சாட்சியமானது அரசு தரப்பு வழக்கினை நிரூபிப்பதாக அமைந்திருக்கவில்லை.

7). அ.சா.2 திரு. கணேசன் என்பவர் இவ்வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக இறுதி அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளார். அ.சா.2 கணேசன் இந்நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்தில், சாட்சி கோபால் மற்றும் புகார்தாரர் சண்முகவேலை தெரியும், தற்போது சண்முகவேல் திருவனந்தபுரத்தில் வசித்து வருகிறார். ஆஜர் எதிரியை தனக்கு தெரியும், ஆனால் சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். மேற்கண்ட அ.சா.2 கணேசனின் சாட்சியமானது அரசு தரப்பு வழக்கினை நிரூபிப்பதாக அமைந்திருக்கவில்லை.

8). அ.சா.3 திரு. சண்முகவேல் என்பவர் இவ்வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக இறுதி அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளார். அ.சா.3 சண்முகவேல் இந்நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்தில், கேரளா மாநிலம் கரமனையில் வசித்து ஸ்வீட் கடை நடத்துவதாகவும், தனது சொந்த ஊர் கோபாலசமுத்திரம் என்றும், ஆஜர் எதிரியை தெரியும், கடந்த 04.08.2018-ம் தேதி காலை 10.00 மணிக்கு, தன் வீட்டில் முன்னால் நின்றபோது, ஆஜர் எதிரி அங்கு வந்து தேவடியா மவனே, புண்டமவனே என்று அசிங்கமாக பேசி உன் மகளிடம் தான் பேசத்தான் செய்வேன். நீ என்ன செய்துவிடுவாய் என்று கேட்டு என்னை பிடித்து கீழே தள்ளினார். இதனை பார்த்த கோபால் மற்றும் கணேசன் ஆகியோர் வந்த போது அவர்கள் வந்ததால் நீ தப்பினாய் இல்லையென்றால் உன்னை துண்டு துண்டாக வெட்டி கொன்றுவிடுவேன் என்று மிரட்டி சென்றுவிட்டார். தான் சகிக்க முடியாமல் போலிசில் சென்று புகார் கொடுத்தேன். தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான். அந்த புகார் மனு அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

9). அ.சா.4 திரு. முப்பிடாதி என்பவர் தனது சாட்சியத்தில், தான் தற்போது அரசு விரைவு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுனராக வேலை செய்து வருவதாகவும், சாட்சி இசக்கி ரவி என்பவரை தெரியும் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2-வது கையெழுத்து தன்னுடையது தான். சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு தங்கள் வீட்டுக்கு முன்பு நின்று கொண்டிருந்த போது, முன்னீர்பள்ளம் போலிசார் அங்கு வந்தார்கள், தன்னிடம் கையெழுத்து கேட்டார்கள். அவர்கள் ரோந்து பணி வந்ததற்கு சாட்சியாக தன்னிடம் கேட்டுக்கொண்டதன் பேரில் கையெழுத்து போட்டுக் கொடுத்தேன். தன்னுடன் இசக்கிரவியும் கையெழுத்து செய்தார். அந்த பார்வை மகஜர் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

10). அ.சா.5 திரு. மரியதாஸ் என்பவர் தனது சாட்சியத்தில், தான் தற்போது முன்னீர்பள்ளம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருவதாகவும், கடந்த 04.08.2018-ம் தேதி 12.00 மணிக்கு, தான் நிலைய பொறுப்பில் இருந்த போது, வாதி சண்முகவேல் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று

அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண். 311/2018 சட்டப்பிரிவுகள் 294(பி), 352, 506(2) இதசவாக வழக்கு பதிவு செய்தேன். தான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டதாகவும், முதல் தகவல் அறிக்கையுடன் வாதியின் புகார் மனுவை இணைத்து நீதித்துறை நடுவர் எண்.5–க்கு அனுப்பி வைத்ததாகவும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை வழக்கின் புலன் விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் எபின் என்பவரிடம் ஒப்படைத்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

11). திரு. அ.சா.6 திரு. எபின் என்பவர் தனது சாட்சியத்தில், தான் தற்போது நாகர்கோவில் மாவட்ட தனிப்பிரிவு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருவதாகவும், கடந்த 04.08.2018–ல் முன்னீர்பள்ளம் காவல் நிலையம் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது, நிலைய தலைமை காவலர் மரியதாஸ் என்பவர் குற்ற எண், 311/2018 சட்டப்பிரிவுகள் 294(பி), 352, 506(2) இதசவின் கீழ் பதிவு செய்திருந்த வழக்கை தான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு மதியம் 13.30 மணியளவில், சம்பவ இடம் சென்று சாட்சிகள் இசக்கிரவி, முப்பிடாதி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மகஜர், வரைபடம் தயார் செய்ததாகவும், அந்த வரைபடம் அசா4 ஆக குறியீடு செய்யப்பட்டதாகவும், சம்பவ இட சாட்சிகளான கோபால், கணேசன் ஆகியோரை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இவ்வழக்கின் எதிரியை 04.08.2018–ம் தேதி மாலை 5 மணியளவில், பிராஞ்சேரி விலக்கு அருகே வைத்து காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து பாரா காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினதாகவும், இறுதியாக வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 294(பி), 352, 506(2) இதசவின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

12). மேற்கண்ட சாட்சிகள் அ.சா.1 மற்றும் அசா2 ஆகியோர் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ள நிலையில் அசா.3, அசா4, அசா5, அசா6–ன் சாட்சிகளானது இவ்வழக்கில் முக்கியத்துவம் பெறவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

13). இவ்வழக்கில் முன்னிலைப்படுத்தப்பட்ட அரசு தரப்பு சாட்சியங்கள் அடிப்படையிலும், இவ்வழக்கினை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி மெய்ப்பிக்க தவறிவிட்டதால் இவ்வழக்கிலிருந்து குற்றஞ்சாட்டப்பட்ட நபரை குற்றவாளி இல்லை என கருதி இதச பிரிவுகள் 294(பி), 352, 506(2)—ன் கீழான குற்றசாட்டிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பு வழங்கப்படுகிறது.

முடிவாக, இவ்வழக்கின் எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 294(பி), 352, 506(2)—ன் இ.த.ச படி சுமத்தப்பட்ட குற்றமானது அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து குவிமுச பிரிவு 248(1)—ன் படி குற்றவாளி அல்ல என தீர்மானித்து எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது. .

இந்த தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்யப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 13.02.2023—ம் தேதி திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/— Thiru. V. Arumugam 13.02.2023

நீதித்துறை நடுவர் எண்.5 (மு.கூ.பொ.)

திருநெல்வேலி.

**1. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சி பட்டியல் (திரு/திருமதி/செல்வி)**

அ.சா.1 --- கோபால்

அசா.2 --- கணேசன்

அசா.3 --- சண்முகவேல்

அசா.4 --- முப்பிடாதி

அ.சா.5 --- மரியதாஸ்

அ.சா.6 --- எபின்

**2. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்கள்**

அ.சா.ஆ.1 --- புகார் மனு

அ.சா.ஆ.2 --- பார்வை மகஜர்

அ.சா.ஆ.3 --- முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.4 --- வரைபடம்

**3. அரசு தரப்பில் சான்று பொருள் – இல்லை**

**4. குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தரப்பில் சாட்சி பட்டியல் – இல்லை**

**5. குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தரப்பில் சான்றாவணங்கள் – இல்லை**

**6. குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தரப்பில் சான்று பொருள் – இல்லை**

Sd/- Thiru. V. Arumugam 13.02.2023

நீதித்துறை நடுவர் எண்.5 (மு.கூ.பொ.)

திருநெல்வேலி.

நீதித்துறை நடுவர்எண்.5 (மு.கூ.பொ.)

திருநெல்வேலி.

C.C.No. 445/2020

தீர்ப்புரை

நாள் – 12.02.2023.